**தலாவ பிரதேச சபையி - 2022**

-------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தலாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப் பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய பணமாக கிடைத்த நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா.3,251,873 ஆக இருந்த போதிலும் அது ரூபா.3,317,248 ஆக காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | பணமாக கிடைத்த வட்டி மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி என்பன வித்தியாசத்திற்கு காரணமாகும். | பணமாகப் பெறப்பட்டவை மட்டும் காசுப் பாய்ச்சலாக கருதப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.15,029,343 பெறுமதியான சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் என்பன மூலதன மானியங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | மூலதன மானியங்கள் மற்றும் சொத்துக்கள், கருவிகள், உபகரணங்கள் என்பன சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 24 பெட்டிக் கடைகளுக்கான பெறுமதி ரூபா.4,617,600 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | எப்பாவல சுடுகாடு நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலவிடப்பட்டிருந்த | -மேற்படி- | மூலதனச் செலவுகள் சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.11,351,366 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | LDSP செயல் திட்டத்தின் கீழ் முன் பள்ளி நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூபா.30,872,032 மற்றும் குழாய் கிணறு நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா.1,033,175 கொடுப்பனவு சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக கட்டட திருத்த வேலை செலவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி-- | -மேற்படி- |
| (ஊ) | LDSP செயல்திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டின் ரூபா.1,922,679 செலவில் கட்டப்பட்ட மதில் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டில் ஜனவரி 01 ஆம் திகதியில் மேலதிகமாக / பற்றாக்குறையாக இனம் காணப்படாத மூலதன மானிய மீதியான ரூபா.29,653,915 தொகை நிகர சொத்துக்கள் / உரிமைகள் வித்தியாசக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மூலதன மானியங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | கரகஹவெவ கழிவு செயல் களத்தின் வேலைகள் குறிப்பிடப்பட்ட வகையில் இடம்பெறாததால் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா.2,984,588 தொகை நடைமுறை பொறுப்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நடைமுறைப் பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்ற தண்டப்பண ஏட்டிற்கு அமைய மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் பெறப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா.19,907,494 ஆக உள்ள போதிலும் நிலுவை நீதிமன்ற தண்டப்பண கணக்கிற்கு அமைய அது ரூபா.22,280,385 ஆக இருந்ததால் ரூபா.2,572,891 வித்தியாசம் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | முத்திரைக் கட்டண ஏட்டிற்கு அமைய மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா.6,954,231 ஆக உள்ள போதிலும் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டண கணக்கிற்கு அமைய அது ரூபா.9,291,981 கூடுதல் ஆனதால் ரூபா.2,337,750 வேறுபாடு காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | வருட ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவற்றின் வித்தியாசங்களுக்கு அமைய பணம் மற்றும் பணத்துக்கு நிகரானவற்றின் அதிகரிப்பு ரூபா.20,669,357 ஆக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா.30,706,675 கூடுதலாக இருந்ததால் ரூபா.10,037,318 வித்தியாசம் காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 ஆம் தேதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றுக்கு அமைய நிகர சொத்துக்களின் பெருமதி ரூபா.539,478,570 ஆக இருந்த போதிலும் உரிமைத்துவ வித்தியாச கூற்றுக்கு அமைய அது ரூபா.539,526,304 அதிகமாக இருந்ததால் ரூபா.47,734 வித்தியாசம் காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா.2,898,173 பெறுமதி கொண்ட இருப்பு மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்டது என சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் களஞ்சிய சாலை பேரேட்டுக் கணக்கு சரியாக சமப்படுத்தப்பட்டிருக்காமை, வழங்கப்பட்ட திகதி முறையாக குறிப்பிடப்பட்டிருக்காமை மற்றும் இருப்பு பரீட்சிப்பு அறிக்கை இல்லாமை என்பவற்றால் இருப்பு மீதி சரியானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாது இருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கடன்படுநர் மற்றும் கடன் தருனர் ஏடுகள் பராமரிக்கப்பட்டு இருக்காதுடன் முன்னைய ஆண்டில் கடன்படுநர் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்டிருந்த ரூபா.21,722,252 கடன் மீதி தொடர்பிலும் மற்றும் கடன் தருனர் மீதிக்கு சேர்க்கப்பட்டிருந்த ரூபா.35,519,348 தொகையும் என்ன என்பது தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் முற்பணக் கைத்தொழில் கணக்கில் இருந்த ரூபா.3,351,606 ஆரம்ப மீதி என்ன என்பது தொடர்பிலான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்காதுடன் மீளாய்வாண்டில் LDSP செயல் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தம்புத்தேகம முன் பள்ளிக்காக பெற்றுக் கொடுத்திருந்த ரூபா.5,251,834 முற்பணம் மற்றும் அதனை தீர்த்தல் தொடர்பான பேரேட்டுக் கணக்கின் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையில் நிர்மாணிக்கப்பட்ட மதகுகள் மற்றும் நெடுஞ்சாலைகளும் கிளை வீதிகளும் தொடர்பான | -மேற்படி- | -மேற்படி- |

விபரங்கள் மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டு இருக்கவில்லை.

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 | பெறுமதி ரூபா.76,975 கொண்ட 02 வைப்பு மீதிகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப் படுகின்றது என்பது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்கு அமைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.11,591,445 ஆக இருந்தத்துடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டில் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.14,234,885 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான வழி | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீத வரி மற்றும் வரி | 13,100,493 | 14,183,776 | 14,662,751 | 22,331,932 | 13,206,476 | 14,561,565 | 9,636,543 | 22,810,907 |
| (ii) | வாடகை | 21,132,744 | 13,622,075 | 14,677,552 | 5,450,457 | 21,734,898 | 18,270,589 | 12,681,752 | 6,505,934 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 4,221,400 | 4,230,756 | 4,657,114 | 649,150 | 4,503,150 | 5,216,434 | 4,192,326 | 1,075,508 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 25,743,850 | 28,774,180 | 19,138,164 | 17,894,350 | 19,082,253 | 19,260,705 | 37,938,419 | 8,258,334 |
| | | 64,198,487 | 60,810,787 | 53,135,581 | 46,325,889 | 58,526,777 | 57,309,293 | 64,449,040 | 38,650,683 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2009 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டுக்கான வீத வரி மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிலுவை வீத வரி ரூபா.19,919,623 ஆகம். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை வியாபார வரி ரூபா.606,000 மற்றும் கைத்தொழில் வரி ரூபா.26,250 ஆகும். | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சபைக்கு சொந்தமான 04 நீர் செயற் திட்டங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகை ரூபா.780,059 ஆகும். | நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன். | -மேற்படி- |

(ஆ) **வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை கடை வாடகை ரூபா.3,818,030 மற்றும் குத்தகைக்கு கொடுத்ததனால் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா.3,311,279 ஆகும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | -மேற்படி- |

(இ) **ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணத் தொகை ரூபா.22,280,385 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா.9,291,981 ஆகும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் . |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 3.1.1 கைவிடப்பட்ட பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கரகஹவெவ கொம்போஸ்ட் செயற்களத்தினை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் இருந்து ரூபா.5,760,735 நிதி கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அதற்கு அமைய 2012 ஜனவரி 27 ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டு 06 மாத காலத்திற்குள் அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. 04 கட்டங்களின் கீழ் ஒப்பந்தம் வழங்கப்பட்டு இருந்த இந்த செயல் திட்டத்தின் முதலாவது கட்டத்திற்கு உரிய தகவல்கள் கணக்காய்வுக்கு | கரகஹவெவ கொம்போஸ்ட் செயற்களத்தினைப் பரீட்சிப்பு செய்து பொருத்தமான செயல் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த இடத்தில் இருக்கும் சொத்துக்களைப் பாதுகாத்து உபயோகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ஏனைய கட்டங்களுக்காக ரூபா.1,077,389 செலவு மேற்கொள்ளப்பட்டு அந்த செயல் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | | |

**3.1.2 கால்நடை அறுக்கும் இடங்களைப் பேணிச் செல்லுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்புத்தேகம மற்றும் எப்பாவல ஆகிய இடங்களில் 02 மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்கள் மற்றும் 03 பன்றி இறைச்சி விற்பனை நிலையங்கள் வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டு இருந்த போதிலும் அந்த இறைச்சி நிலையங்களுக்கான அறுக்கும் இட வசதிகள் சபையினால் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கால்நடை அறுத்தல் கூடங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1988 ஒகஸ்ட் 23 ஆம் திகதி இடப்பட்ட துணை சட்ட வர்த்தமானி அறிவித்தலில் 32 துணை சட்டங்கள் 9 பிரிவுகளின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் பரீட்சிப்பு செய்யும் அனைத்து 01 கிலோ இறைச்சிக்கும் சபையின் இலச்சினையைப் பயன்படுத்துவதற்காக ரூபா.10 இற்கு மேற்படாத கட்டணத்தினை அறவிடுவதற்கும் மற்றும் அறுக்கப்படும் கால்நடைகளின் விபரங்கள் உரிய படிவத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கும் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டத்தின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைவரினால் பயன்படுத்தப்பட்ட் கொண்ட கெப் வாகனம் 2019 ஏப்ரல் 15 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் அதற்கான முகவர் நிறுவனத்திடம் இருந்து (United Moters) சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைக்கு அமைய நட்டமானது ரூபா.3,400,520 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் இந்த வாகனத்தின் திருத்த வேலைகளுக்கான செலவு | 02 தவணைகள் அறவிடப்பட்டதன் பின்னர் ஓட்டுனரிடம் இருந்து அனைத்து தொகையும் அறவிடப்பட்டு நிறைவு செய்யப்படும். தலைவரிடம் இருந்து அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கின்றேன். | தலைவரிடம் இருந்து அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.4,458,993 வரையில் அதிகரிக்கும் என அந்த முகவர் நிலையத்தினால் (United Moters) சபைக்குத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. விபத்து நடந்து 03 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்டிருந்த போதிலும் இந்த வாகனத்தைத் திருத்துவதற்கும் மற்றும் காப்புறுதி நட்ட ஈட்டுத் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மேலே குறிப்பிடப்பட்ட விபத்துக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 90 சதவீதமான ரூபா.4,013,094 பிரதேச சபை தலைவரிடம் இருந்தும் மற்றும் எஞ்சிய 10 சதவீதமான ரூபா.445,899 ஓட்டுனரிடம் இருந்தும் அறவிடுமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2022 நவம்பர் 15 ஆம் திகதி வரையில் ஓட்டுனரினால் ரூபா.150,000 மட்டும் செலுத்தப்பட்டு இருந்ததுடன் தலைவரினால் எந்த ஒரு தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றுதன் பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன். | தலைவரிடம் இருந்து அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | எப்பாவல உப அலுவலகத்தில் சேவையாற்றி மரணமடைந்த வருமான பரிசோதகர் ஆர் ஆர் கே எஸ் ரத்நாயக்க அவர்களினால் 2021 ஆம் ஆண்டு களத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா.667,075 தொகை பிரதேச சபையிடம் வழங்கப்பட்டிருக்காமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | LDSP செயல் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிபப்பட்டிருந்த தலாவ புகையிரத நிலைய வீதி கார்ப்பெட் இடும் செயல் திட்டத்திற்காக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணம் அந்த செயல் திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்ட காரணத்தால் பிணை காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் முன்னாள் செயலாளரினால் அறவிடப்பட வேண்டிய ரூபா.1,826,330 மிகை விதிப்பு தொடர்பில் நிதி கூற்றுக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலத்தை விஞ்சிருந்த 130 வியாபாரங்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான வேலை திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு குறித்த நிறுவனங்களை தெளிவுபடுத்துதல் வேண்டும். |

**3.4 செயலற்ற அல்லது குறை பயன்பாடுடைய சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் ரூபா.9,500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட தம்புத்தேகம வாரச் சந்தை கட்டடத் தொகுதி மீளாய்வாண்டிலும் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் தம்புத்தேகம நகர மத்திய வீதியைத் தடை செய்யும் வகையில் மறைப்பு அமைக்கப்பட்டு புதன்கிழமை வாரச் சந்தை நடாத்துதல் இடம்பெற்று வருகின்றது. | 2023 ஜூன் மாதம் தொடக்கம் வாரச் சந்தையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | தாமதமின்றி வாரச் சந்தையை உரிய இடத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.5 சொத்து முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எப்பாவல நூல் நிலையத்தில் காணாமல் போனதாக அடையாளம் காணப்பட்டிருந்த 124 புத்தகங்கள் தொடர்பில் பெறுமதி கணக்கிடப்பட்டு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இனம் காணப்பட்டு நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |